ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk


# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2020 சனவரி 17 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2019 நவெம்பர்

### முக்கிய பண்புகள்

*இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2019 நவெம்பரில் வர்த்தகப் பற்றாக்குறை (ஆண்டிற்கு ஆண்டு) சிறிதளவில் சுருக்கமடைந்தது. 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்படட சிறிதளவு அதிகரிப்புடன் இறக்குமதிகள் மீதான செலவினத்தல் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி சேர்ந்த கொண்டமையின் விளைவாக, 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைந்தது. 2019 நவெம்பரில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், சுற்றுலா வருகைகள் வீழ்ச்சியடைந்த போதும், சுற்றுலாத் தொழில் துறையில் தொடர்ச்சியான மீட்சி அவதானிக்கப்பட்டிருக்கிறது. 2019 நவெம்பரில் தொழிலாளர் பணவனுப்பல்கள் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்து 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் ஏழாவது பிரிவின் பெறுகைகள் மற்றும் அரச பிணையங்கள் சந்தைக்கான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் பெறுகைகள் என்பனவற்றுடன் பெருமளவிற்கு அதிகரித்தது. எனினும், கொழும்புப் பங்குகள் பரிவர்த்தனை இம்மாத காலப்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்துள்ளது. 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் 2020இன் இதுவரையான காலப்பகுதியிலும் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக உயர்வடைந்துள்ளது.*




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு என்பனவற்றின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/ta/node/6181

| வகை | நவெ 2018 ஐ.அ.டொ. மில் | நவ 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன-நவெ 2018 ஐ.அ.டொ. மில் | சன-நவெ 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 980 | 979 | -0.1 | 10,856 | 10,939 | 0.8 |
| இறக்குமதிகள் | 1,765 | 1,741 | -1.3 | 20,498 | 18,153 | -11.4 |
| வர்த்தக மீதி (தேறிய) | -785 | -762 | | -9,642 | -7,214 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 367 (ஆ) | 332 (இ) | -9.5 | 3,905(ஆ) | 3,138 (இ) | -19.6 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 555 | 515 | -7.2 | 6,431 | 6,052 | -5.9 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -30 | -36 | | -29 | -30 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 86 | 190 | | 5,490 | 6,451 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | - | 69 | | 698 | 580 | |
| நீண்ட காலக் கடன்கள் | 86 | 121 | | 2,292 | 1,471 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,500 | 4,400 | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | - | 164 | | 252 | 328 | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | | | | 1,652 | 772 | |
| திரண்ட நிலுவை | | | | -807 | 488 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை


(அ) தற்காலிகமானது
(ஆ) 2018 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது
(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2019 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்
(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது
(உ) ஒவ்வொரு காலப்பகுதியினதும் முதல் ஒன்பது மாதங்களுக்கான கிடைக்கத்தக்க தரவுகள் இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- 2019 நவெம்பரில் **வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறை** 2018 நவெம்பரின் ஐ.அ.டொலர் 785 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 762 மில்லியனுக்கு சிறிதளவால் சுருக்கமடைந்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை, 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 9,642 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 7,214 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 2,428 மில்லியனால் சுருக்கமடைந்தது. இவ்வீழ்ச்சிக்கான முக்கியமான பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.


- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதிகளின் விலைகளுக்கான ஏற்றுமதிகளின் விலை விகிதம் 2019 நவெம்பரில் 9.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) கணிசமாக மோசமடைந்தமைக்கு ஏற்றுமதி விலைகள், இறக்குமதிகளின் விலைகளின் வீழ்ச்சியிலும் பார்க்க விரைந்த வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். ஒன்றுசேர்ந்த அடிப்படையில் வர்த்தக மாற்று விகிதம் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில், 1.6 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

**வரைபடம் 1 : வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைவதற்கு பங்களித்த முக்கிய காரணிகள்: 2019 சனவரி – நவெம்பர் (ஐ.அ.டொ. மில்லியன்)**





**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2018 - 2019)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2018 – 2019)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்


- 2018 நவெம்பருடன் ஒப்பிடுகையில் 2019 நவெம்பரில் **வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஐ.அ.டொலர் 979 மில்லியனுக்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து முக்கிய துணைத் துறைகளும் ஒத்த போக்கினைப் பரந்தளவிற்கு பதிவுசெய்தமையே காரணமாகும்.

- 2019 நவெம்பரில் **வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் வீழ்ச்சியடைந்து இதன் துணைத் துறைகளின் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தேயிலைக்கான பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில், தாழ்ந்த சராசரி ஏற்றுமதி விலைகளின் விளைவாக வீழ்ச்சியடைந்த போதும் தேயிலையின் ஏற்றுமதி அளவு தொடர்ந்தும் அதிகரித்தது. மேலும், 2019 நவெம்பரில் வாசனைத் திரவியங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு கறுவாவின் தாழ்ந்த ஏற்றுமதி விலைகளும் கராம்பு மற்றும் மிளகின் தாழ்ந்த ஏற்றுமதி அளவுகளுமே முக்கிய காரணங்களாகு

அமைந்தன. ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் காணப்பட்ட குறைந்த கேள்வியின் காரணமாக கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் வீழ்ச்சியடைந்தன. மாறாக, சிறுவேளாண்மை உற்பத்திகளின் முக்கியமாக பழவகை, பாக்கு மற்றும் வெற்றிலை என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்த வேளையில், தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகள் தூண்டுதலாக அமைந்தன.


- 2019 நவெம்பரில் **கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2018 நவெம்பருடன் ஒப்பிடுகையில் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டது. குறைந்தளவு டயர் ஏற்றுமதிகளின் விளைவாக இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த வேளையில், பொறிகள் மற்றும் எந்திர சாதனங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், அனைத்துத் துணை வகைகளினதும் தாழ்ந்த செயலாற்றத்தின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, நீர்க்கல மற்றும் வானூர்தி எரிபொருட்கள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட தாழ்ந்த மசகெண்ணெய் விலைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் காணப்பட்ட நீர்க்கல எரிபொருட்களின் தாழ்ந்த விலைகள் முக்கிய காரணமாக அமைந்து பெற்றோலிய உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் குறைவடைவதற்கு வழிவகுத்தது. எனினும், பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நப்தா மற்றும் எரிபொருள் எண்ணெயின் உயர்ந்த ஏற்றுமதிகளின் மூலம் மிகப் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. மாறாக, புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் 2019 நவெம்பரில் அதிகரித்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்தான ஆடை ஏற்றுமதிகளுக்குக் காணப்பட்ட உயர்ந்த கேள்வி ஆதரவாக அமைந்தது. இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு அனைத்து வகைகளின் கீழும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு அதிகரித்தமையே காரணமாக அமைந்தது.
- மொத்த ஏற்றுமதிகளில் 0.3 சதவீதத்திற்கு மாத்திரம் வகைகூறும் **கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2019 நவெம்பரில் அதிகரித்தமைக்கு, இரும்புத் தாதுக்கள், உலோகக் கழிவுகள் மற்றும் சாம்பல் கட்டிகளின் ஏற்றுமதிகள் வழிவகுத்தன.
- 2019 நவெம்பரில், ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 11.6 சதவீதத்தினால் மேம்பட்ட வேளையில் (ஆண்டிற்கு ஆண்டு) ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண் 10.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து, ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 நவெம்பருடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | நவெ 2018 ஐ.அ.டொ. மில். | நவெ 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) | சன-நவெ 2018 ஐ.அ.டொ. மில். | சன-நவெ 2019 ஐ.அ.டொ. மில். | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **787.9** | **787.6** | **…** | **8,444.9** | **8,626.6** | **2.2** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 33.9 | 34.9 | 3.0 | 423.8 | 410.9 | (3.0) |
| விலங்குத்தீன் | 8.5 | 8.3 | (2.6) | 99.6 | 117.4 | 17.8 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 469.8 | 484.8 | 3.2 | 4,824.3 | 5,113.2 | 6.0 |
| இதில் ஆடைகள் | 438.5 | 448.1 | 2.2 | 4,501.2 | 4,753.7 | 5.6 |
| புடவைகள் | 22.5 | 25.7 | 14.0 | 235.9 | 261.5 | 10.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 8.8 | 11.1 | 26.3 | 87.2 | 98.1 | 12.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 71.3 | 60.6 | (15.0) | 798.9 | 793.1 | (0.7) |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.3 | 26.9 | 32.1 | 259.1 | 281.4 | 8.6 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 37.4 | 28.9 | (22.8) | 401.6 | 370.3 | (7.8) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 6.4 | 4.5 | (30.5) | 111.9 | 139.7 | 24.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 56.9 | 56.5 | (0.7) | 569.2 | 465.0 | (18.3) |
| இரசாயன உற்பத்திகள் | 12.0 | 14.8 | 23.8 | 153.6 | 163.5 | 6.5 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.9 | 8.4 | (29.5) | 128.8 | 120.1 | (6.7) |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 4.4 | 6.0 | 35.5 | 29.3 | 44.5 | 52.1 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 10.8 | 6.2 | (42.4) | 139.0 | 95.4 | (31.4) |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 6.4 | 6.4 | 0.9 | 70.3 | 67.7 | (3.6) |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 14.6 | 14.5 | (0.7) | 153.1 | 163.1 | 6.6 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 2.6 | 2.7 | 6.6 | 29.3 | 27.7 | (5.4) |
| ஏனையவை | 20.7 | 23.2 | 11.7 | 253.3 | 253.5 | 0.1 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **187.8** | **187.3** | **(0.2)** | **2,362.7** | **2,266.5** | **(4.1)** |
| தேயிலை | 103.2 | 101.5 | (1.7) | 1,311.4 | 1,240.6 | (5.4) |
| இறப்பர் | 2.2 | 1.1 | (48.2) | 29.7 | 22.4 | (24.6) |
| தேங்காய் | 20.5 | 22.9 | 11.9 | 287.1 | 307.7 | 7.2 |
| வாசனைத்திரவியங்கள் | 27.7 | 24.1 | (13.1) | 330.3 | 291.5 | (11.7) |
| காய்கறிகள் | 2.1 | 2.3 | 6.2 | 26.1 | 29.2 | 12.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.3 | 3.1 | 37.8 | 31.5 | 31.1 | (1.3) |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 7.6 | 13.3 | 76.7 | 110.0 | 105.5 | (4.2) |
| கடலுணவு | 22.3 | 19.0 | (14.6) | 236.6 | 238.6 | 0.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.4** | **2.4** | **3.0** | **32.4** | **30.6** | **(5.6)** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.5** | **1.4** | **(7.1)** | **16.2** | **15.6** | **(3.9)** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **979.6** | **978.8** | **(0.1)** | **10,856.3** | **10,939.2** | **0.8** |

(அ) தற்காலிகமானவை ….. மிகச் சொற்பமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- **வணிகப்பொருள் இறக்குமதிகள்** 2019 நவெம்பரின் (ஆண்டிற்கு ஆண்டு) 1.3 சதவீதம் கொண்ட மிதமான வீழ்ச்சியுடன், தொடர்ந்து 13ஆவது மாதமாக ஐ.அ.டொலர் 1,741 மில்லியனுக்கு சுருக்கமடைந்தமைக்கு இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமையே தூண்டுதலாக அமைந்தது.


- 2019 நவெம்பரில் **நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி** மீதான செலவினம் அதிகரித்தமைக்கு, உயர்ந்த இறக்குமதி அளவுகள் மற்றும் விலைகள் இரண்டினதும் காரணமாக, காய்கறிகள் (முக்கியமாக வெங்காயம்) சீனி மற்றும் பண்ணை உற்பத்திகள் போன்ற உணவு மற்றும் குடிபான இறக்குமதிகள் வழிவகுத்த போதும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் வகை தாழ்ந்த தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினால் தூண்டப்பட்டது. எனினும், 2019இன் முதலரைப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் சலுகை அடிப்படையிலான உரிமங்களின் கீழ் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீண்டும் ஆரம்பித்தமையின் தாக்கத்தினை பிரதிபலிக்கின்ற விதத்தில் தனியாள் உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான செலவினம் 2019 யூலையிலிருந்து சராசரியாக, ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

- 2019 நவெம்பரில் **இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி** மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு குறைந்த இறக்குமதி அளவு மற்றும் அனைத்துத் துணை வகைகளினதும் அதாவது மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றம் நிலக்கரி என்பன தொடர்பான தாழ்ந்த பன்னாட்டு விலைகள் இரண்டினதும் காரணமாக பொருட்கள் மீது ஏற்பட்ட தாழ்ந்த செலவினம் முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், 2018 நவெம்பரில் இடம்பெற்ற இரும்பு மற்றும் உருக்கு என்பனவற்றின் உயர்ந்த இறக்குமதிகளின் தளத்தாக்கம் காரணமாக அடிப்படை உலோக இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தது. எனினும், உயர்ந்த அளவுகளின் முக்கிய காரணமாக கோதுமை மற்றும் சோளத்தின் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்த வேளையில் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு துணிகள் மற்றும் நூலிழைகளின் உயர்ந்த இறக்குமதிகள் வழிவகுத்தன. மேலும், 2019 நவெம்பரில் கனிப்பொருட்கள் உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சிமெந்து சூளைக்கற்களின் மீதான செலவினம் கணிசமாக அதிகரித்தது.

- அதேவேளை, 2019 நவெம்பரில் **முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள்** மீதான செலவினம் அதிகரித்தமைக்கு அனைத்துத் துணை வகைகளினதும் உயர்ந்த செலவினமே காரணமாக அமைந்தது. இதன்படி, பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு மருத்துவம் மற்றும் ஆய்வுகூடச் சாதனங்கள் தூண்டுதலாக அமைந்த வேளையில் புகைவண்டி எந்திரங்கள் மற்றும் பெட்டிகளின் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினத்தின் காரணமாக போக்குவரத்துச் சாதனங்கள் மீதான செலவினம் அதிகரித்தது. மேலும், பாலங்கள் மற்றும் பாலங்களின் கட்டுமானத்துடன் தொடர்பான இரும்பு மற்றும் உருக்குப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதி காரணமாக கட்டடப்பொருட்களின் மீதான செலவினம் அதிகரித்தது.


- 2019 நவெம்பரில் இறக்குமதி அளவுச் சுட்டெண் 0.3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 1.7 சதவீதத்தினால் குறுக்கமடைந்து இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2018 நவெம்பருடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைகளே முழுத் தூண்டுதலாக அமைந்தமையினை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் (அ)

| வகை | நவெ 2018 (ஐ.அ.டொ. மில்.) | நவெ 2019 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) | சன– நவெ 2018 (ஐ.அ.டொ. மில்.) | சன–நவெ 2019 (ஐ.அ.டொ. மில்.) | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப்பொருட்கள்** | **363.5** | **370.4** | **1.9** | **4,622.7** | **3,565.7** | **(22.9)** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 111.0 | 140.7 | 26.7 | 1,471.4 | 1,278.9 | (13.1) |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 3.2 | 3.3 | 2.1 | 121.2 | 32.1 | (73.5) |
| இதில் அரிசி | 1.4 | 0.8 | (-39.7) | 103.9 | 10.9 | (89.5) |
| பால் உற்பத்திகள் | 25.4 | 31.6 | 24.2 | 299.0 | 282.0 | (5.7) |
| காய்கறிகள் | 21.8 | 32.2 | 48.1 | 277.9 | 269.5 | (3.0) |
| கடலுணவு | 15.9 | 20.3 | 27.7 | 182.4 | 199.3 | 9.2 |
| சீனி மற்றும் சிற்றுண்டிகள் | 13.4 | 19.8 | 47.9 | 223.4 | 179.9 | (19.5) |
| வாசனைத்திரவியங்கள் | 8.6 | 12.1 | 41.3 | 104.1 | 102.2 | (1.9) |
| குடிபானங்கள் | 7.3 | 7.5 | 2.5 | 81.1 | 75.0 | (7.5) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 15.6 | 14.0 | (10.0) | 182.2 | 138.9 | (23.8) |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 252.5 | 229.7 | (9.0) | 3,151.2 | 2,286.8 | (27.4) |
| தனியாள் ஊர்திகள் | 104.9 | 80.7 | (23.1) | 1,496.2 | 731.7 | (51.1) |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 46.5 | 44.4 | (4.5) | 488.6 | 498.0 | 1.9 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 23.2 | 20.5 | (11.6) | 283.4 | 251.1 | (11.4) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 16.8 | 21.7 | 29.2 | 216.0 | 187.4 | (13.2) |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 24.1 | 26.2 | 8.6 | 250.9 | 225.6 | (10.1) |
| வீட்டுச்சாதனம் மற்றும் தளபாடங்கள் | 12.8 | 14.8 | 15.8 | 156.4 | 155.2 | (0.8) |
| ஏனைய நுகரக்கூடிய உணவல்லாப்பொருட்கள் | 24.2 | 21.4 | (11.7) | 259.7 | 237.8 | (8.4) |
| **2. இடைநிலைப்பொருட்கள்** | **1,074.6** | **992.5** | **(7.6)** | **11,504.9** | **10,413.2** | **(9.5)** |
| எரிபொருள் | 403.6 | 319.6 | (20.8) | 3,834.6 | 3,558.4 | (7.2) |
| இதில் மசகெண்ணெய் | 110.7 | 96.1 | (13.2) | 886.7 | 920.4 | 3.8 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 245.6 | 202.2 | (17.7) | 2,750.2 | 2,447.5 | (11.0) |
| நிலக்கரி | 47.2 | 21.3 | (54.8) | 197.6 | 190.5 | (3.6) |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 9.9 | 19.4 | 97.1 | 552.7 | 177.5 | (67.9) |
| இதில் தங்கம் | 0.1 | 0.1 | … | 438.7 | 2.4 | (99.4) |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 245.7 | 256.9 | 4.5 | 2,617.0 | 2,661.1 | 1.7 |
| இரசாயன உற்பத்திகள் | 73.2 | 66.2 | (9.6) | 834.3 | 764.4 | (8.4) |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 60.2 | 52.6 | (12.6) | 645.9 | 558.7 | (13.5) |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 45.4 | 37.0 | (18.5) | 486.8 | 419.7 | (13.8) |
| அடிப்படை உலோகங்கள் | 77.0 | 34.3 | (55.4) | 596.8 | 512.1 | (14.2) |
| வளமாக்கி | 24.6 | 9.1 | (63.0) | 235.6 | 204.0 | (13.4) |
| கோதுமை மற்றும் சோளம் | 22.0 | 59.5 | 169.7 | 348.6 | 326.3 | (6.4) |
| உணவுத் தயாரிப்புக்கள் | 21.0 | 20.7 | (1.1) | 275.1 | 210.9 | (23.3) |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.8 | 12.9 | (31.1) | 189.7 | 168.5 | (11.1) |
| கனிம உற்பத்திகள் | 12.8 | 45.7 | 256.0 | 171.0 | 231.1 | 35.1 |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 60.4 | 58.5 | (3.1) | 716.8 | 620.3 | (13.5) |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **326.0** | **377.8** | **15.9** | **4,296.4** | **4,167.1** | **(3.0)** |
| பொறி மற்றும் கருவிகள் | 179.5 | 216.2 | 20.5 | 2,291.6 | 2,251.1 | (1.8) |
| கட்டடப் பொருட்கள் | 103.9 | 114.5 | 10.3 | 1,383.2 | 1,391.7 | 0.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 42.1 | 46.5 | 10.3 | 615.9 | 518.4 | (15.8) |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 0.5 | 0.6 | 7.5 | 5.6 | 5.9 | 4.1 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **0.5** | **0.4** | **(17.7)** | **74.2** | **6.8** | **(90.8)** |
| **மொத்த இறக்குமதிகள்** | **1,764.6** | **1,741.1** | **(1.3)** | **20,498.1** | **18,152.9** | **(11.4)** |

(அ) தற்காலிகமானவை ……. மிகச் சொற்பமானவை
**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி


## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் மாதாந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை படிப்படியாக மீட்சியடைந்திருக்கிறது. 2019 நவெம்பரில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 176,984 ஆக விளங்கி, 2019 ஒத்தோபரின் 22.5 சதவீதம், செத்தெம்பரின் 27.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் 2019 நவெம்பரில் 9.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. அவுஸ்திரேலியா, பிரான்சு, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப் பங்களித்தது. அதேவேளை, ருஷியா மற்றும் உக்ரேனிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019 நவெம்பரில் (ஆண்டிற்கு ஆண்டு) மேம்பட்டன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 1,672,039 ஆக விளங்கி 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 19.6 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின.

- 2019 நவெம்பரில் **சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்,** 2018 நவெம்பரின் ஐ.அ.டொலர் 367 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 332 மில்லியனில் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டன. ஒன்றுசேர்ந்த நியதிகளில், 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,905 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,138 மில்லியனாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டன.


- அதேவேளை, 2019 நவெம்பரில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** ஐ.அ.டொலர் 515 மில்லியனாக விளங்கி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஒன்றுசோந்த அடிப்படையில் 2019 முதல் பதினொரு மாத காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6,052 மில்லியனுக்கு 5.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்
இலங்கை மத்திய வங்கி


## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2019 நவெம்பரில் இலங்கை ப.நா. நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஏழாவது தொகுதியாக ஐ.அ.டொலர் 164 மில்லியனைப் பெற்றது. இப்பிந்திய தொகுதி பெறப்பட்டமையின் மூலம் ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் ஐ.அ.டொலர் 1.31 பில்லியன் கொண்ட மொத்தத் தொகை பெறப்பட்டது.
- 2019 நவெம்பரில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடு ஐ.அ.டொலர் 46 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், இவ்வாண்டின் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 234 மில்லியனாக விளங்கின.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2019 நவெம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 36 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன. ஒன்றுசேர்ந்த அடிப்படையில், 2019இன் முதல் பதினொரு மாத காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான நிதியியல் பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.
- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2019 நவெம்பர் காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 30 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2019 நவெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, 2019 நவெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 10.2 பில்லியனாக விளங்கி 6.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- 2019 நவெம்பர் இறுதி வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் இலங்கை ரூபா தொடர்ந்தும் உயர்வடைந்தது. 2019 திசெம்பரில் செலாவணி வீதம் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டமையினால் 2019ஆம் ஆண்டுப்பகுதியில் ரூபா 0.6 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மேலும், 2020 சனவரி 17ஆம் திகதி வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 0.1 சதவீதத்தினால் உயர்வடைந்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 சனவரி 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | 2020 (சனவரி 17 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | +0.1% |
| யூரோ | -12.7% | +2.6% | +0.8% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -2.8% | +0.5% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | +1.6% |
| கனேடியன் டொலர் | -9.3% | -3.7% | +0.1% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | +1.7% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | -0.3% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி